# வெற்றிடங்கள்

## கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடெட்

(முழுமையாக அரசுரிமையாக்கப்பட்ட நிறுவனம்)

## கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சு

நிறுவனத்தில் தற்போது நிலவும் பதவி வெற்றிடங்களுக்கான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. சிரேஷ்ட முகாமையாளர் - நிதி (01 வெற்றிடம்) நிரந்தர அடிப்படை**

**1.1 தகைமைகள்: வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

**வெளிவாரி :**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிதிக் கணக்கியல் அல்லது நிதி முகாமைத்துவத்தில் (B.Com) ஒரு இளமாணிப் பட்டம்

   அத்துடன்

   இயைபுடைய துறையில் பட்டப்பின்படிப்புத் தகைமை (Masters') அல்லது பதவியின் விடயப்பரப்பிற்கு இயைபான அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் இணை அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவம்.

2. பதவிக்கு இயைபான துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியதிகள் சபை / நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனமொன்றில் ''முகாமைத்துவ மட்டத்தில்'' குறைந்தபட்சம் 15 வருட கால அனுபவம்.

   உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)

**உள்வாரி :**

1. மேற்கூறப்பட்ட வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்பட்ட தகைமைகளைப் பெற்றிருத்தல்.
2. பதவிக்கு இயைபான விடயப்பரப்பில் முகாமைத்துவ வகுதி (MM) 1ஆம் தரப் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருட கால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**1.2 சம்பள அளவு** : HM 1-1-2016 ரூபா [80,295 -15 x2,270 -114,345]

**1.3 வயதெல்லை** : 35 வயதிற்குக் குறையாதவர்களாகவும் 55 வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சகல விண்ணப்பதாரர்களும்**

i. இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.
ii. இலங்கையின் எப்பாகத்திலும் பதவிக்குரித்தான கடமைகளை மேற்கொள்வதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நன்னடத்தை உடையவராகவிருத்தல் வேண்டும்.

**தயவு செய்து கவனிக்கவும்**

சிரேஷ்ட முகாமையாளர் (நிதி) வெற்றிடம் குருநாகல், தொடங்கஸ்லந்த, மதுராகொட கிரபைட் சுரங்க வேலைத் தளத்தில் உள்ளது.

கிரபைட் மற்றும் அதனுடன் தொடர்புடைய கைத்தொழில்கள் அல்லது உற்பத்திக் கைத்தொழில்களில் அனுபவம் மற்றும் இதனையொத்த திறன்கள் கொண்ட அனுபவம் சாதகமாகக் கருதப்படும்.

அரசாங்க சேவை / கூட்டுத்தானபங்கள் / நியதிகள் சபைகளில் ஏற்கனவே சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**ஏனைய அனுகூலங்கள்**

1. ஊழியர் சேமலாப நிதிக்கு ஊழியரினால் 10% பங்களிப்பும் தொழில் வழங்குநரினால் 15% பங்களிப்பும் செலுத்தப்படும். (3% ஊ.ந.நி உட்பட) வாழ்க்கைச் செலவுப் படி, போக்குவரத்துக் கொடுப்பனவு மற்றும் ஏனைய நியதிகள் சபை கொடுப்பனவுகள் அரசாங்க சுற்றறிக்கையின் பிரகாரம் வழங்கப்படும். நாளாந்த வருகை அடிப்படையில் மாதாந்த உணவுக் கொடுப்பனவு, ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதித் திட்டங்கள் மற்றும் உற்பத்தி அடிப்படையில் ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்படும்.

2. அரசாங்கத் திணைக்களங்கள்/கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சபையில் பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களை இயைபுடைய நிறுவனங்களின் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும்.

3. தயவு செய்து உங்கள் விண்ணப்பங்களை சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு பின்வரும் முகவரிக்கு 2025-02-25ஆம் திகதிக்கு முன் அனுப்ப வேண்டும்.

**தலைவர்,**
**கஹட்டகஹ கிரபைட் லங்கா லிமிடட்,**
**561/3, எல்விட்டிகல மாவத்தை, நாராஹென்பிட்டி,**
**கொழும்பு 05.**